நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

# M.C. No. 2/2024

## P.W.3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | அருண் |
| தந்தை / கணவர் பெயர் | : | வேடியப்பன் |
| கிராமம் | : | தருமபுரி |
| வட்டம் | : | தருமபுரி |
| மாவட்டம் | : | தருமபுரி |
| சாட்சி வரிசை எண் | : | **PW3** |
| வயது | : | 32 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 01–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–11.55AM )

**1.** நான் தற்போது பாரத ஸ்டேட் வங்கி, தருமபுரி கிளையில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பெயர் மற்றும் முகவரியை வைத்து எங்களது வங்கியில் சேமிப்பு கணக்கு ஒரு குறிப்பிட்ட நபர் வைத்துள்ளாரா என்று பார்க்க

முடியாது. சித்ரா, க/பெ. மணி என்ற பெயரில் 19 க்கு மேற்பட்ட நபர்கள் கணக்கு வைத்துள்ளார்கள். குறிப்பாக சம்மந்தப்பட்ட நபரின் ஆதார்அட்டை, PAN Card அல்லது செல்போன் எண் ஆகியவற்றை கொடுத்தால்தான் என்னால் சம்மந்தப்பட்ட நபரின் வங்கி கணக்கு விவரங்களை தாக்கல் செய்ய முடியும்.

2. மேற்படி ஆவணங்களை எனக்கு அனுப்பி வைத்தால் அதற்கான விவரங்களை மீண்டும் ஆஜராகி தாக்கல் செய்கிறேன். ஒரு நபரின் வங்கி கணக்கு என்பது தனி பாதுகாப்பு பெட்டகத்திற்கான கணக்கு என்பது தனி. ஆனால் பாதுகாப்பு பெட்டகத்திற்கான கட்டணத்தை வசூல்செய்ய ஒரு வங்கி கணக்கு கட்டாயம் தேவை, எங்களிடம் வங்கி கணக்கு வைத்துள்ள நபருக்கு தான் அந்த பாதுகாப்பு பெட்டக வசதியை ஏற்படுத்தி தருவோம்.

3. ஒரு நபர் ஒரு வங்கியில் ஒன்றுக்கும் மேற்பட்ட சேமிப்பு கணக்குகளை வைத்திருக்கலாம். சேமிப்பு கணக்கு எண்.30392434867 என்ற வங்கி கணக்கு எண் எங்கள் வங்கியில் கணக்கு வைத்துள்ள ஹரிபிரபாகரன் மணி என்பவரது ஆகும். மேற்படி வங்கி கணக்கு எண்ணிற்கான Bank statement நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஹரிபிரபாகரன் சேமிப்பு கணக்கு எண்.30392434867 கணக்கிறக்கான 01.04.2024 முதல் 19.08.2025 வரையிலான வங்கி கணக்கு அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(12.05 PM)

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–( 12.45 PM)

1. சித்ரா என்பவர் பெயரில் எங்களது வங்கியில் பாதுகாப்பு பெட்டகம் வசதி யாருக்கும் கொடுக்கப்படவில்லை. மேற்படி சித்ரா க.பெ. மணி என்பவர் பெயரில் பாதுகாப்பு பெட்டகம் வசதி யாருக்கும் கொடுக்கப்படவில்லை என்பதற்கான எங்களது வங்கி கிளையின் மூத்த மேலாளர் கொடுத்த கடிதத்தை தாக்கல் செய்கிறேன். **(அந்த கடிதம் எ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**
2. தருமபுரியில் மூன்று பாரத ஸ்டேட் வங்கி கிளைகள் உள்ளது. எங்களது வங்கி தலைமையகம் ஆகும். தலைமையகத்தில் உள்ள கணக்கு விவரங்களை பொருத்துதான் நான் சாட்சியம் அளிக்கிறேன். அதுப்போக லக்கியம்பட்டி மற்றும் தருமபுரி டவுன் ஆகிய இரண்டு இடங்களில் பாரத ஸ்டேட் வங்கி உள்ளது.

அதுப்பற்றியாக விவரங்கள் எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–'12.50PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**